அனுப்புநர்

திரு.பெ.குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்

பெறுநர்

2890

1.இயக்குநர்
தொழில்நுட்ப கல்வி இயக்குநரகம் கிண்டி,சென்னை-25.
2.பதிவாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், காரப்பாக்கம் சென்னை-97.
3.பதிவாளர்
டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகம்,
கிண்டி சென்னை-25.
4.மண்டல இணை இயக்குநர்,
கல்லூரி கல்வி இயக்ககம், வேலூர் மாவட்டம்.
5.முதல்வர் / துணை இயக்குநர்
அரசு தொழிற்கல்வி நிலையம், வேலூர்.
6.முதன்மை கல்வி அலுவலர்கள்.
வேலூர், இராணிப்பேட்டை மற்றும்
திருப்பத்தூர் மாவட்டங்கள்.
7.முதன்மை கல்வி அலுவலர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம் SSA, வேலூர்
8.மாவட்ட கல்வி அலுவலர்கள்.
வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் அரக்கோணம், வாணியம்பாடி, கல்வி மாவட்டங்கள்.
9.வட்டார கல்வி அலுவலர்கள்,
ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்.
10.அனைத்து கல்வி நிலையங்கள்,
ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்.

**ந.க.எண் :- என்4/3460/2021 , நாள்: 15.09.2021**

அன்புடையீர்,

பொருள்: சிறுபான்மையினர் நலம் - ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் - மத்திய அரசின் சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை திட்டங்கள் - பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை - 2021-22 தேசிய கல்வி உதவித் தொகை இணையதளம் (National Scholarships Portal) மூலம் செயல்படுத்துதல் - கல்வி நிறுவனங்களின் தலைமை அலுவலர் (Head of the Institution ) மற்றும் கல்வி நிலையங்களின் ஒருங்கிணைப்பு அலுவலர் (Institute Nodal Officer) ஆகியோரின் ஆதார் எண் விவரங்களை UIDAI மூலம் சரிபார்த்தல் - தொடர்பாக

பார்வை:
1.சென்னை, சிறுபான்மையினர் நலத்துறை, இயக்குநர் அவர்களின் கடித எண்.பி1/2907/2021, நாள்: 16.07.2021.
2.இவ்வலுவலக கடித எண்: என்4/3460/2020 நாள்: 30.07.2021.
3.இயக்குநர் சிறுபான்மையினர் நலத்துறை அவர்களின் சுற்றறிக்கை எண்: பி1/2907/2021 நாள்: 07.09.2021

பார்வையிலுள்ள கடிதத்தின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வையிலுள்ள கடிதத்தில் மத்திய அரசால் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகைகளான பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகையானது ஆண்டு தோறும் தேசிய கல்வி உதவித் தொகை இணையதளம் மூலம் (National Scholarships Portal) மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் திறம்பட செயல்படுத்த பல்வேறு முன்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், மேற்படி பார்வை (1)-இல் காணும் கடிதத்தில் இக்கல்வி உதவித்தொகை திட்டத்தில் நடைபெறும் சில முறைகேடுகளை களைய நடப்பாண்டு ஆரம்பம் முதலே மத்திய அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் வரப்பெறும் போலி விண்ணப்பங்களை தடுக்கும் பொருட்டு கல்வி நிறுவன தலைவர்கள் மற்றும் கல்வி நிறுவன ஒருங்கிணைப்பாளர்களின் சுய விவரங்களை ( ஆதார் எண் ,பெயர், பாலினம், பிறந்த தேதி , அலைபேசி எண் ) ஆதார் எண்ணுடன் மின்னணு முறையில் சரிபார்க்கும் முறையை (UIDAI-Unique Identification Authority of India) மத்திய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் நடப்பாண்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு , அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வகை தனியார் கல்வி நிறுவனங்கள் மேற்படி பணிகளை உடனடியாக செயல்படுத்த வேண்டும் எனவும், இப்பணிகளை பள்ளி/கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ளாவிட்டால் நடப்பாண்டு சிறுபான்மையின மாணவ, மாணவிகள் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட கல்வி நிறுவனங்களால் பரிசீலினை செய்ய இயலாது எனவும், பார்வை (2)-இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது பார்வை (3)-இல் காணும் இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு,ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் 3566 கல்வி நிறுவனங்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (NSP portal) பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி 1573 கல்வி நிறுவனங்கள் ஆதார் விவரங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள 1993 கல்வி நிலையங்கள் ஆதார் விவரங்கள் பதிவு செய்யமால் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. **(இதுகுறித்தான விவரம் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.)** சமந்தப்பட்ட கல்வி நிலையங்களின் அலுவலர்கள் இப்பணியினை இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே மேற்படி பொருள் தொடர்பாக முதன்மை கல்வி அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் தங்களின் கீழ் NSP இணையதளத்தில் பதிவு செய்துள்ள தொடக்க / நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளை மாவட்ட கல்வி அலுவலர்கள் /வட்டார கல்வி அலுவலர்கள் மூலம் **சிறப்பு முகாம் நடத்தி 25.09.2021க்குள்** ஆதார் விவரங்களை சரிபார்த்து அதன் விவரங்களை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இணை இயக்குநர்,

மண்டல கல்லூரி கல்வி இயக்ககம், வேலூர், தங்களின் ஆளுமைக்கு உட்பட்ட கல்வி நிலைய முதல்வர்களுக்கு மேற்படி பொருள் தொடர்பாக உரிய அறிவுரைகள் வழங்கி ஆதார் விவரங்களை சரிபார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைத்து வகை கல்வி நிறுவனங்களுக்கு மேற்காணும் பொருள் தொடர்பாக உரிய அறிவுரைகள் வழங்குமாறும் இணைப்பில் உள்ள வழிமுறைகளை பின்பற்றி இப்பணியினை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் சுய விவரங்கள் மற்றும் ஆதார் விவரங்களை சரிபார்க்காத பள்ளிகள்/ கல்லூரிகளின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : INO சுயவிவரங்களை UIDAI மூலம் சரிபார்த்தலுக்கான வழிமுறைகள்
மற்றும் ஆதார் விவரம் சரிசெய்யதா கல்வி நிலையங்களின் விவரம்

ஒம்/- பெ.குமாரவேல் பாண்டியன்.
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்.

//உத்திரவின் படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்
வேலூர்

நகல்
1.இயக்குநர் ,
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை 5
2.மாவட்ட ஆட்சித்தலைவர்
இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் } (தகவலுக்காக அனுப்பப்படுகிறது.)
3. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள். } (தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது)

Annexure-I

## Scholarship Schemes for Minority Students 2021-22
## Aadhaar Authentication of Institution Nodal Officer/ Head of Institutions in NSP

Step-by-Step Instruction

i. Aadhaar Authentication will be applicable to all INOs as well as Head of Institutions registered in NSP upto 2020-21.

ii. Existing INO's & Head of Institutions will have to login in 2021-22 with their existing login credentials.

iii. After successful login they will have to do AADHAAR Auth through "Update Profile" option.

iv. After successful auth, NSP will prompt for OTP authentication (OTP will be sent on AADHAAR linked mobile number).

v. After successful profile update, other existing options in their profile like report section, administration section, verification section etc. will get enabled.

vi. DNO are not involved in this process as Authentication will be done through Unique Identification Authority of India (UIDAI) electronically.

vii. Although options to reset the password and change INO's or Head of Institution's details are still available under DNO logins and these can be used according to need.

viii. For resetting INO's login credentials @ DNO level, DNO will be required to enter AADHAAR related information of INO/Head of Institution for Authentication.

ix. After successful Authentication, new INO/Head of Institution's information will be updated in the Institute Profile under Institution login and new password will be sent to INO's AADHAAR linked mobile.

x. Authentication will be done on AADHAAR Number, name, gender, mobile number and DoB. So INO / Head of Institution are supposed to enter information on these 5 parameters exactly as present in their AADHAAR registration. Any mismatch will result in failure of Authentication and hence user login will not become functional.

xi. PDF version of detailed instruction along with Screenshots are also available in NSP Home page under "Important Documents'.

**Sd/.. S. Suresh Kumar,**
Director of Minorities Welfare.

16/12/21

For Director of Minorities Welfare.